# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை - 2024 சனவரி

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

**கண்ணோட்டம்:**

இவ்வினாத்தாள் 100 புள்ளிகளை உள்ளடக்கிய **மூன்று பகுதிகளைக்** கொண்டிருந்தது.

1. **பகுதி A – 20 புள்ளிகளுக்காக** நான்கு (1 - 4) கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது.
2. **பகுதி B – 30 புள்ளிகளுக்காக** மூன்று (5 - 7) கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது.
3. **பகுதி C – 50 புள்ளிகளுக்காக** மூன்று (8 - 10) கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது.

## பகுதி A

**வினா இல. 01**

இவ்வினா **வரையறுக்கப்பட்ட ஹோப் கம்பனியின்** இலாப நட்டமற்ற புள்ளியையும் பாதுகாப்பு எல்லையையும் கணிப்பிடுமாறும் பாதிடப்பட்ட வருடாந்த விற்பனைக் கணியத்தில் எதிர்பார்க்கப்படும் இலாபத்தைக் கணிப்பிடுமாறும் கேட்டிருந்தது.

**செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான BEP சூத்திரத்தைப் பயன்படுத்தி, BEP மற்றும் பாதுகாப்பு எல்லையை அலகுகளில் கணிப்பிட்டிருந்தனர். அதற்கிணங்க, பாதிடப்பட்ட வருடாந்த விற்பனைக் கணியத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலாபத்தையும் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

**பொதுவான தவறுகள் :**

(1) மாறும் மேந்தலை ரூபா 80/- இனைக் கருத்திற் கொள்ளாது அலகொன்றிற்கான பங்களிப்பைக் கணித்திருந்தனர்.

(2) பாதுகாப்பு எல்லையின் கணிப்பீட்டை செய்திருக்கவில்லை. அது தொடர்பான அறிவு குறைவாகக் காணப்பட்டமையே இதற்கான காரணமாக இருக்கலாம்.

(3) பாதிடப்பட்ட விற்பனைக் கணியம் 75,000 அலகுகள், அலகொன்றிற்கான பங்களிப்பைக் கணிக்கும்போது விற்பனை விலையாக எடுக்கப்பட்டிருந்தது.

(4) பாதிடப்பட்ட வருடாந்த விற்பனைக் கணியத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலாபத்தைக் கணிப்பிடுவதற்கு சூத்திர முறை பயன்படுத்தப்பட்டதுடன் எண் பெறுமானங்களைப் பிழையாகப் பிரதியிட்டதன் காரணமாக, சூத்திரத்தைத் தீர்க்க முடியவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

பரீட்சார்த்திகள் இதுபோன்ற வினாக்களைச் செய்து பார்த்து பயிற்சி பெற வேண்டும் என்பதுடன், BEP இன் பொருளையும் அதனைக் கணிப்பிடும் முறையையும் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

## வினா இல. 02

இவ்வினா 2022 மற்றும் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட PXL கம்பனியின்** தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தை (WCC) கணிப்பிடுமாறு கேட்டிருந்தது. அத்துடன் சிறந்த தொழிற்படு மூலதன முகாமைக்கான இரண்டு தந்திரோபாயங்களை இனங்காணுமாறும் கேட்டிருந்தது.

**செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானது.

பரீட்சார்த்திகள் சரியான WCC சூத்திரத்தைக் காட்டி, WCC யைக் கணிப்பிட்டிருந்தனர். அதற்கிணங்க, தொக்கு இருப்புக் காலம் மற்றும் வியாபார வருமதிகள் காலம் என்பன பிரதியீடு செய்யப்பட்டு வியாபார சென்மதிகள் காலம் சரியாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், அதிகளவான முயற்சியின்றி, செய்யப்பட்டிருக்கக் கூடிய வியாபார சென்மதிகள் புரள்வு விகிதத்தைப் பயன்படுத்தி வியாபார சென்மதிகள் புரள்வு நாட்களைக் கணிப்பிடுவதற்கு சொற்பளவிலான பரீட்சார்த்திகளால் முடியாமற் போயிருந்தது.

**பொதுவான தவறுகள் :**

(1) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான WCC யைக் கணிப்பிட மறந்திருந்தனர்.

(2) தொக்கு இருப்புக் காலம் மற்றும் வியாபார வருமதிகள் சேகரிப்பு நாட்கள் ஆகியவற்றுக்கு வியாபார சென்மதி புரள்வு நாட்களைச் சேர்த்திருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

பரீட்சார்த்திகள் இதுபோன்ற வினாக்களைச் செய்து பார்த்து பயிற்சி பெற வேண்டும் என்பதுடன் தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தின் பொருளையும் அதனைக் கணிப்பிடும் முறையையும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

## வினா இல. 03

இவ்வினா **வரையறுக்கப்பட்ட கங்கா கம்பனியின்** பொருள்கள் **X** மற்றும் **Y** இற்கான 2024 ஆம் ஆண்டிற்கான விற்பனைப் பாதீட்டை அலகுகளிலும் பெறுமதியிலும் தனித்தனியாகத் தயாரிக்குமாறு கேட்டிருந்தது.

**செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கு பல பரீட்சார்த்திகள் விடையளித்திருந்த போதிலும், அவர்களால் முழுமையாக விடை காண முடியவில்லை. இதனால் மோசமானளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர். விலைகளில் எதிர்பார்க்கப்பட்ட சதவீதம் அதிகரித்ததன் பின்னர் இரண்டு பொருள்களுக்குமான புதிய சந்தை விலையை அவர்கள் கணிப்பிட்டிருந்தனர். இதன் பின்னர், மொத்த சந்தை அளவை இனங்காணாததன் காரணமாக, அவர்களால் மேலும் தீர்க்க முடியவில்லை.

மிகச் சில பரீட்சார்த்திகளே முழுப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர், பெரும்பாலானவர்கள் மோசமான அளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

இந்தப் பாடப்பரப்பில் கோட்பாட்டு அறிவு குறைவாகக் காணப்பட்டதை அவர்களின் விடைகளிலிருந்து அவதானிக்க முடிந்தது.

இதுபோன்ற வினாக்களில் பயிற்சி செய்து பார்க்கவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது.

**பொதுவான தவறுகள் :**

(1) விலை அதிகரிப்புச் சதவீதமானது மாற்றமடையும் அளவுடன் பெருக்கப்பட்டு, பின்னர் பழைய விலையினால் பெருக்கப்பட்டிருந்தது.

(2) மொத்த சந்தை அளவு இனங்காணப்படாததுடன் அது சந்தைப் பங்கின் சதவீத அதிகரிப்புக்குப் பின்னரும் அவ்வாறே இருந்தது.

**பரீட்சகரின் பரிந்துரை :**

இதுபோன்ற வினாக்களில் பயிற்சி செய்வதுடன் அடிப்படையைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

**வினா இல. 04**

இவ்வினா தொடர்புடைய கிரயங்களைக் கருத்திற் கொண்டு, விசேட பொருளுக்கான ஓடரை ஏற்றுக்கொள்ளலாமா என்பதை மதிப்பிடுமாறு கேட்டிருந்தது.

**செயலாற்றுகை :**

மிகவும் திருப்தியற்றது.

**பொதுவான தவறுகள் :**

(1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் **பொருள் X** இன் கிரயத்தை இனங்காண்பதற்கும் ஏனைய உற்பத்திச் செலவினங்களை இனங்காண்பதற்குமான புள்ளிகளை மாத்திரம் பெற்றிருந்தனர். சிலர் சரியான மேலதிக நேர வீதத்தில் நேர் கூலிக் கிரயத்தைக் கணிப்பிட்டிருந்தனர்.

(2) ஆனால் பெரும்பாலானவர்கள் விற்கத்தகுந்த பெறுமதியின் சந்தர்ப்பச் செலவாக இருந்த **பொருள் Y** இற்கான சரியான கிரயத்தை கணிப்பிடத் தவறியிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரை :**

அந்தந்த தொடர்புடைய மற்றும் தொடர்பற்ற கிரயங்களைச் சரியாகக் காட்டி, விடைகளை எழுதுவதற்கு பரீட்சார்த்திகள் கற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

## பகுதி B

**வினா இல. 05**

இவ்வினா **வரையறுக்கப்பட்ட லக்ஷி ஹோட்டலுக்கான** 2024 சனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான காசுப் பாதீட்டின் முன்வைப்பு தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை**

குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர். அவர்கள் தொடர்புடைய மாதத்திற்கான அனைத்து செலவினங்களையும் சரியாக இனங்கண்டிருந்தனர். ஆரம்ப காசு மீதி சரியாகக் காட்டப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், அறையில் தங்குவதற்கான காசு உட்பாய்வை பல பரீட்சார்த்திகள் சரியாக அடையாளங் கண்டிருக்கவில்லை. அவர்கள் 2024 சனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக்கான காசு உட்பாய்வுகளாக அந்தந்த மாதங்களுக்கு வழங்கப்பட்ட அறைத் தங்கல்களை எடுத்திருந்தனர். அவர்கள் 2024 சனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான காசு உட்பாய்வாக முற்பணமாகப் பெறப்பட்ட வருமானத்தை அடையாளங் காணத் தவறியிருந்தனர்.

மேலும், அறைகளிலிருந்தான காசு உட்பாய்வைக் கணிக்கும்போது, முழு மாதத்திற்குமான மொத்த வருமானத்தை அடையாளங் காணாது, அறை வருமானமாக நாளொன்றுக்கான அறைக் கட்டணம் கருத்திற் கொள்ளப்பட்டிருந்தது.

**பொதுவான தவறுகள் :**

(1) சில பரீட்சார்த்திகள் இறுதிக் காசு மீதியைக் காட்டியிருக்கவில்லை.

(2) பெப்ரவரி மாதம் 29 நாட்களைக் கொண்டுள்ளது எனத் தெளிவாகத் தரப்பட்ட அறிவுறுத்தல்களை புறக்கணித்து, சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய ஒவ்வொரு மாதத்திலுமுள்ள நாட்களின் எண்ணிக்கை 30 எனச் சிலர் எடுத்திருந்தனர்.

(3) சனவரி மாதத்திற்கான வருமானம் முன்கூட்டியே 2023 நவெம்பரில் பெறப்பட்டிருந்த போதிலும், சனவரி மாதத்துடன் தொடர்புடைய மாறும் செலவினங்கள் சரியாகக் கவனத்திற் கொள்ளப்பட வில்லை.

(4) பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஆண்டிற்கு 5% இனைப் பயன்படுத்தி வட்டி வருமானத்தைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர் ஆயினும் அந்தந்த மாதங்களுக்கான மாதாந்த வட்டி வருமானத்தைக் காட்டுவதற்கு அதனை 12 இனால் பிரிப்பதற்குத் தவறியிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

(1) கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.

(2) வினாவில் தரப்படும் அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும்.

(3) பாடப் புத்தகத்திலுள்ள வினாக்கள், விடைகளைச் செய்து பார்த்து பயிற்சி பெறவும்.

## வினா இல. 06

இந்த வினா கீழ்வருவனவற்றைப் பரீட்சித்திருந்தது.

(a) தரப்பட்ட வளங்களிலிருந்து வரையறைக் காரணி/ காரணிகளை அடையாளங் காணுதல்

(b) இனங்கண்ட வரையறைக் காரணியை அடிப்படையாகக் கொண்டு, உத்தம உற்பத்திக் கலவையைக் கணித்தல்

**செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சிறப்பாக இருந்தது.

**பொதுவான தவறுகள் :**

தரப்பட்ட வளங்களுடன் பாதிடப்பட்ட விற்பனை அலகுகளை அடைவதற்குத் தேவையான மொத்த வளங்களை ஒப்பீடு செய்து, வரையறைக் காரணியைச் சரியாக இனங்கண்டதன் மூலம் அவர்களுடைய ஆற்றலைக் காட்டியிருந்தனர்.

எவ்வாறாயினும், சரியான மிகை / பற்றாக்குறை வளத்தின் அளவை இனங்கண்டிருந்த சில பரீட்சார்த்திகள், இறுதித் தீர்மானத்தை மாற்றி எழுதியிருந்தனர். உதாரணமாக, நேர் மூலப்பொருளின் சரியான மிகைத் தொகையை பற்றாக்குறை என எழுதியிருந்தனர். இதனால் அந்தத் தீர்மானத்துடன் தொடர்புடைய புள்ளிகளை அவர்கள் இழந்திருந்தனர்.

ஆனால், வரையறைக் காரணியொன்றிற்கான பங்களிப்பைக் கணிக்கும்போது, சில பரீட்சார்த்திகள் வரையறைக் காரணியொன்றுக்கான பங்களிப்பை சரியாக இனங்காணாமையால் தவறு விட்டிருந்தனர்.

எவ்வாறாயினும், வரையறைக் காரணிக்காக கணிக்கப்பட்ட பங்களிப்பை அடிப்படையாகக் கொண்ட தரமிடல் சரியாகச் செய்யப்பட்டது.

**பரீட்சகரின் பரிந்துரை :**

அலகொன்றுக்கான பங்களிப்பை எவ்வாறு கணிப்பிடுவது, வரையறைக் காரணியொன்றுக்கான பங்களிப்பை எவ்வாறு கணிப்பிடுவது மற்றும் இனங்காணப்பட்ட வரையறைக் காரணியின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றித் தேடியறிவதற்கு கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.

## வினா இல. 07

இவ்வினா கீழ்வருவனவற்றைப் பரீட்சித்திருந்தது.

(a) சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயத்தைக் கணித்தல் (b) மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயத்தைக் கணித்தல் (C) சந்தைப் பெறுமதியைப் பயன்படுத்தி, நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயத்தைக் கணித்தல்

(b) மூலதனக் கிரயத்தின் முக்கியத்துவம்.

**செயலாற்றுகை :**

ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இல்லை.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயத்தைச் சரியாகக் கணித்திருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் பங்கிலாப வளர்ச்சி மாதிரியைப் பயன்படுத்தி, பங்கொன்றிற்கான சந்தை விலையுடன் பங்கொன்றிற்கான பங்கிலாபத்தை ஒப்பீடு செய்து, சாதாரண பங்குகளின் கிரயத்தைக் கணித்திருந்தனர்.

மேலும், வரிக்குப் பின்னரான வட்டிக் கொடுப்பனவைச் சரியாக இனங்கண்ட பெரும்பாலான பரீட்சார்த்திகளால் மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயத்திற்கான கணிப்பீடு சரியாக அணுகப்பட்டிருந்தது.

ஆனால், இரு கழிவு வீதங்களில் கணிக்கப்பட்ட நிகர இற்றைப் பெறுமதிகள் IRR (உள்ளக வருவாய் வீதம்) இனைக் கணிக்கும்போது சரியாகப் பயன்படுத்தப்பட்டன.

மேலும், சந்தைப் பெறுமதிகளைப் பயன்படுத்தி WACC சரியாகக் கணிப்பிடப்படவில்லை. தற்போது வர்த்தகம் செய்யப்படுகின்ற விலை (சந்தை விலை) வினாவில் தெளிவாகத் தரப்பட்டிருந்த போதிலும், மீட்கத்தக்க தனிச்சங்களின் சந்தைப் பெறுமதியைப் பெறுவதில் பரீட்சார்த்திகள் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

எவ்வாறாயினும், அவர்கள் சம்பந்தப்பட்ட காசு உட்பாய்வு மற்றும் வெளிப் பாய்வுகளைச் சரியாக அடையாளங் காணவில்லை. அவர்கள் உட்பாய்வுகளையும் வெளிப்பாய்வுகளையும் மாற்றி மாற்றி எழுதியிருந்தனர். அத்துடன், அவர்கள் அத்தகைய மீட்கத்தக்க தனிச்சங்களின் வழங்கல் ஆண்டை விளங்கிக் கொண்டிருக்கவில்லை. இதனால், மீட்பு ஆண்டும் பிழையாகவே கவனத்திற் கொள்ளப்பட்டிருந்தது.

**பொதுவான தவறுகள் :**

(1) பங்கிலாபக் கொடுப்பனவில் எந்தவித வளர்ச்சியும் வினாவில் கூறப்பட்டிருக்காத போதும், சாதாரண பங்குகளின் கிரயத்தைக் கணிக்கும்போது ஒரு வளர்ச்சி வீதம் கவனத்திற் கொள்ளப்பட்டிருந்தது.

(2) மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயத்தைக் கணிக்கும்போது தொடக்க ஆண்டிலும் இறுதி ஆண்டிலும் காசு வெளிப்பாய்வு / உட்பாய்வு சரியாக இனங்காணப்படவில்லை.

(3) சாதாரண வாக்குரிமைப் பங்குகள் மற்றும் மீட்கத்தக்க தனிச்சங்களின் சந்தைப் பெறுமதியைக் கணிப்பதில் சிரமங்கள் எதிர்கொள்ளப்பட்டிருந்தன.

(4) மூலதனக் கிரயத்தின் முக்கியத்துவம் தொடர்பில் தரப்பட்ட விடைகள் மோசமானதாக, திருப்தியற்றதாக இருந்தன.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

(1) கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.

(2) வினாவைக் கவனமாக வாசித்து, வினாத்தாளில் தரப்பட்ட அறிவுறுத்தல்களை மாத்திரம் பிரயோகிக்கவும்.

## பகுதி C

**வினா இல. 08**

இவ்வினா கணிப்பீட்டின் மூலம் கீழ்வரும் முரண்களைப் பகுப்பாய்வு செய்யும் அறிவைப் பரீட்சித்திருந்தது.

(i) விற்பனை விலை முரண்

(ii) நேர் பொருள் விலை முரண்

(iii) நேர் பொருள் கலவை முரண்

(iv) நேர் பொருள் விளைவு முரண்

மேலும், உண்மையான பங்களிப்புடன் பாதிடப்பட்ட பங்களிப்பை இணக்கம் செய்வதற்கான செயற்பாட்டுக் கூற்று ஒன்றையும் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது.

**செயலாற்றுகை :**

ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமாக இருந்ததுடன், பெரும்பாலானவர்கள் இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருக்கவில்லை. எவ்வாறாயினும், பாடத்தை கூர்ந்த படித்து, கடந்த கால வினாத்தாள்களில் இதேபோன்ற வினாக்களைச் செய்து பார்த்து பயிற்சி பெற்றவர்களுக்கு இது இலகுவாக முழுப் புள்ளிகளையும் பெற்றிருக்கக்கூடிய ஒரு வினாவாக இருந்தது.

விற்பனை விலை முரண் சரியாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் மற்றைய முரண்கள் பெரும்பாலானவர்களால் சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

சூத்திரங்கள் சரியாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பகுதி (iii) மற்றும் பகுதி (iv) இலுள்ள நேர் பொருள் கலவை முரண் மற்றும் விளைவு முரண் ஆகியவற்றைத் தீர்ப்பதில் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

பரீட்சார்த்திகள் சாதகமானது / பாதகமானது என்ற குறியீடுகளை குழப்பி எழுதியிருந்ததால் கணக்கிணக்கக் கூற்றானது திருப்திகரமாக இருக்கவில்லை. இதனால் சரியான முடிவு எட்டப்படவில்லை.

**பொதுவான தவறுகள் :**

(1) நேர் பொருள் கலவை மற்றும் விளைவு முரண்களின் கணிப்பீட்டின் போது உண்மையான / நியமக் கலவையை எடுப்பதில் பயிற்சி குறைவாகவே இருந்தது.

(2) சிலர், முரண்கள் சாதகமானதா (F) அல்லது பாதகமானதா (A) என்பதைக் குறிப்பிடவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

கடந்தகால வினாத்தாள்களில் இந்தப் பாடப்பரப்பு இடம்பெற்ற பகுதிகளைச் செய்து பார்த்து பயிற்சி பெறவும்.

## வினா இல. 09

இவ்வினா புதிய இயந்திரத்தின் நிகர இற்றைப் பெறுமதியைக் (NPV) கணிப்பதையும் புதிய இயந்திரத்தின் சாத்தியத்தன்மையை மதிப்பிடுவதையும் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை :**

பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சிறப்பான அமைந்திருந்தது.

**பொதுவான தவறுகள் :**

(1) அமிழ்ந்த கிரயம் - சந்தை ஆய்வுக்கான கிரயம் ரூபா 2 மில்லியன் ஆனது ''0'' ஆண்டின் காசு வெளிப்பாய்வொன்றாகக் கருதப்பட்டது.

(2) தேய்மானமானது நிலையான மேந்தலையில் சீராக்கம் செய்யப்படவில்லை.

(3) செயற்றிட்டத்தின் இறுதியில் தொழிற்படு மூலதன வசூலிப்பு தவிர்க்கப்பட்டிருந்தது.

(4) ஒவ்வொரு ஆண்டிற்குமான பங்களிப்பானது, அது எவ்வாறு கணிக்கப்பட்டது என்பதற்கான எவ்வித விபரமான செய்முறைகளுமின்றிக் காட்டப்பட்டிருந்தது.

(5) 5 ஆவது ஆண்டிற்காகவும் மூலதன விடுதொகை கருத்திற் கொள்ளப்பட்டிருந்தது.

(6) கம்பனியின் கழிவீட்டுக் காரணி (மூலதனக் கிரயம்) 20% ஆகும். ஆனால் சில பரீட்சார்த்திகள் கம்பனியின் மூலதனக் கிரயமாக 10%, 15% போன்ற தவறான வீதங்களைப் பயன்படுத்தியிருந்தனர்.

(7) மூலதன விடுதொகைகள் ஒரு செயற்றிட்ட மதிப்பீட்டின் காசுப் பாய்வினது ஒரு அங்கம் அன்று. ஆனால், பல பரீட்சார்த்திகள் அதனை செயற்றிட்ட மதிப்பீட்டினுள் எடுத்திருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

(1) கடந்த கால வினாத்தாள்களிலுள்ள இதே மாதிரியான வினாக்களைச் செய்து பார்த்து பயிற்சி எடுக்கவும்.

(2) கழிவிடல் நோக்கங்களுக்காக வினாவிலுள்ள மூலதனக் கிரயத்தைப் (கழிவீட்டுக் காரணி) பயன்படுத்தவும்.

(3) கணக்கீட்டு இலாபத்திற்கும் வரிவிதி இலாபத்திற்குமிடையேயான வேறுபாட்டை விளங்கிக்கொள்வது அவசியம்.

## வினா இல. 10

இவ்வினா கீழ்வருவனவற்றைத் தேவைப்படுத்தியிருந்தது.

- **பகுதி (A)** – சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றையும் **செயன்முறை 1** கணக்கையும் தயாரித்தல்.
- **பகுதி (B)** – எதிர்பார்க்கப்படும் பெறுமதியைக் கணிப்பிடுவதன் மூலம் **வரையறுக்கப்பட்ட ஸீனத் கம்பனி**யால் பயன்படுத்தப்பட வேண்டிய தெரிவினை மதிப்பிடுதல்.

**<u>பகுதி (A)</u>:**

**செயலாற்றுகை :**

**பகுதி (A)** – திருப்திகரமாக இருந்தது. பரீட்சார்த்திகள் செயன்முறை 1 கணக்கைத் தயாரித்ததன் மூலம் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இருப்பினும், சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றைத் தயாரிப்பது பற்றிய அறிவு போதுமானதாக இல்லை. குறிப்பாக, அசாதாரண இலாபத்திற்கான சமான அலகுகளைக் கணிக்கின்ற அறிவு குறைவாகவே உள்ளது.

**பொதுவான தவறுகள் :**

(1) சில பரீட்சார்த்திகள் வினாவில் தரப்பட்ட எண் பெறுமானங்களைக் கொண்டு, செயன்முறைக் கணக்கையும் சமான அலகுகள் கூற்றையும் தயாரித்திருந்தனர் ஆயினும் அவர்களால் மேலதிக கணிப்பீடுகளுடன் அவற்றைத் தொடர முடியவில்லை.

(2) சமான அலகுகள் கூற்றைத் தயாரிக்கும்போது ஆரம்ப புத்துருவாகும் வேலை அலகுகளைக் காட்டியிருந்தனர்.

(3) சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றைத் தயாரிக்கும்போது சாதாரண நட்டத்தின் ஒடிவுப் பெறுமதி கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(4) சில பரீட்சார்த்திகள் சமான அலகுகளைக் கணிப்பிடும்போது சாதாரண நட்டத்தைச் சீராக்கம் செய்திருந்தனர்.

(5) அந்தந்த அலகுகளுக்குச் சமானமான மொத்தக் கிரயத்தை அடையாளங் காணும்போது ஆரம்ப புத்துருவாகும் வேலைகளின் பெறுமதி கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(6) சில பரீட்சார்த்திகள் பெறுமதிகளையும் அளவையும் காண்பித்து **செயன்முறை** 1 கணக்கைத் தயாரிப்பதற்குத் தவறியிருந்தனர். அவர்கள் பெறுமதியை அல்லது அளவை மாத்திரம் பயன்படுத்தியிருந்தனர்.

**<u>பகுதி (B)</u>:**

**செயலாற்றுகை :**

இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இல்லை. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவில் என்ன கேட்கப்பட்டது என்பதைச் சரியாக வாசித்திருக்கவில்லை.

**பொதுவான தவறுகள் :**

(1) நிகழ்தகவுகளைப் பயன்படுத்துவதில் பயிற்சி போதாமல் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

(2) இரண்டு தெரிவுகளையும் மதிப்பிடுவதற்கு நிகழ்தகவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் இலாப அணுகுமுறை சரியாக இனங்காணப்படவில்லை.

(3) இலாபத்தைக் கண்டறியும்போது நிலையான கிரயத்தை ஒரு கிரயமாக ஏற்பிசைவு செய்யவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

(1) பரீட்சார்த்திகள் இதேபோன்ற வினாக்களில் பயிற்சி பெறுதல் வேண்டும்.

(2) சுய பாடப் புத்தகத்திலுள்ள சம்பந்தப்பட்ட அத்தியாயத்தை முறையாக வாசிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

- * * * -